செய்தி வெளியீடு எண் :44 நாள் :23.06.2020

**செய்திக்குறிப்பு**

தேனி மாவட்டத்தில் பெரியகுளம் நகராட்சி ஏற்கனவே முழுமையான கட்டுபாட்டு பகுதியாக அறிவிக்கப்பட்டு கட்டுப்பாடுகள் பின்பற்றப்பட்டு வருகிறது. தற்போது மாவட்டத்தில் கொரோனோ நோய் தொற்று அதிகளவில் இருப்பதால் தொற்றின் பரவலை குறைக்கும் பொருட்டு இதர நகராட்சிகளான போடிநாயக்கனூர், தேனி, சின்னமனூர், கம்பம் மற்றும் கூடலூர் நகராட்சி பகுதிகளில் கீழ்காணும் கட்டுப்பாடுகள் 24.06.2020 அன்று மாலை 06.00 மணி முதல் செயல்படுத்த உத்தரவிடப்படுகிறது.

**நகராட்சி பகுதிகள்**

| அனுமதிக்கப்பட்ட இனங்கள் | அனுமதிக்கப்படாத இனங்கள் |
|---|---|
| 1. அத்தியாவசிய சேவைகள்<br>• காய்கறிகள்<br>• பழங்கள், பால் மற்றும் குடிநீர், சமையல் எரிவாயு<br>• மளிகை சாமான்கள் மற்றும் பெட்ரோல் பங்குகள், நடமாடும் வாகனங்களில் காய்கறிகள் மற்றும் பழங்கள் விற்பனை (காலை 06.00 மணி முதல் பிற்பகல் 02.00 மணி வரை)<br>• மருத்துவமனைகள், மருந்து பொருட்கள், மருத்துவ பரிசோதனை மையங்கள், அவசர ஊர்தி (ஆம்புலன்ஸ்)<br>2. கட்டுமானப் பொருட்கள் விற்பனை மற்றும் கட்டுமான பணிகள்<br>3. தொழிற்சாலைகள்<br>4. வங்கிகள்<br>5. ஆட்டோ, டாக்ஸி மற்றும் தனியார் வாகனங்கள் (மருத்துவ அவசர காரணங்களுக்கு மட்டும்) - கார் - 3 நபர்கள், ஆட்டோ - 2 நபர்கள், | • டீ கடைகள்<br>• பேக்கரிகள்<br>• நகைக் கடைகள்<br>• ஜவுளி கடைகள்<br>• பெட்டி கடைகள்<br>• பர்னிச்சர் கடைகள்<br>• வீட்டு உபயோகப் பொருட்கள் விற்பனை செய்யும் கடைகள்<br>• டிவி விற்கும் மற்றும் பழுது நீக்கும் கடைகள்<br>• சாலையோரங்களில் உணவுப்பொருட்கள் விற்பனை செய்யும் கடைகள்<br>• எழுதுபொருட்கள் கடைகள்<br>• காலணிகள் விற்பனை செய்யும் கடைகள்<br>• பேன்ஸி ஸ்டோர்ஸ்<br>• மொபைல் விற்கும் |

| | |
|---|---|
| இருசக்கர வாகனம் - 1 நபர்<br>6. மத்திய மாநில அரசு அலுவலகங்கள் இயங்க அனுமதி<br>7. பொது விநியோகக் கடைகள்<br>8. இறைச்சிக் கடைகள் (காலை 06.00 மணி முதல் பிற்பகல் 02.00 மணி வரை)<br>9. உணவகங்கள் காலை 07.00 மணி முதல் 09.00 மணி வரையிலும் நண்பகல் 12.00 மணி முதல் 02.00 மணி வரையிலும், மற்றும் இரவு 07.00 மணி முதல் 09.00 மணி வரையிலும் பார்சல்கள் மற்றும் டோர் டெலிவரி மட்டும்<br>10. முதியோர் இல்லங்கள், மாற்றுத்திறனாளிகள், ஆதரவற்றோர் இல்லங்கள்<br>11. அம்மா உணவகங்கள், சமுதாய சமையல் கூடங்கள்<br>12. அச்சகங்கள் மற்றும் ஊடகங்கள்<br>13. நீதிமன்றங்கள்<br>14. அனைத்து விதமான சரக்கு வாகனங்கள்<br>15. வேளாண் இடுபொருள் விற்பனை நிலையங்கள்<br>16. பிறப்பு, இறப்பு, திருமணம் போன்ற நிகழ்வுகளுக்கு E-Pass பெற்று வர வேண்டும் | மற்றும் பழுது நீக்கும் கடைகள். |

**கட்டுபாட்டு பகுதிகளில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள அனைத்து கட்டுபாடுகளும் எவ்வித தளர்வுமின்றி முழுமையாக தொடரும்.**

**பொது :**

1. இரு சக்கர வாகனம் மற்றும் தனியார் வாகனங்கள் அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே அரசால் அனுமதிக்கப்பட்ட நபர்களுடன் பயணிக்க அனுமதி.

- கார் - 3 நபர்கள்
- ஆட்டோ- 2 நபர்கள்
- இரு சக்கர வாகனம் - 1 நபர்

மேற்படி அனுமதிக்கப்பட்ட நபர்களை விட அதிகமாக பயணம் செய்யும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

2. அத்தியாவசியப்பொருட்கள் மற்றும் மருத்துவ பொருட்கள் வாங்க வரும் நபர்கள் அனைவரும் கட்டாயம் முக கவசம் அணிந்து வர வேண்டும். முக கவசம் அணியாமல் வெளியே வரும் நபர்களுக்கு பொது சுகாதார சட்டத்தின்படி ரூபாய்.200/- அபாரதம் விதிக்கப்படும். சமூக இடைவெளியை கட்டாயம் பின்பற்ற வேண்டும்.

**பேருந்துகள் இயக்கம்**

- தேனி மாவட்டத்தில் அரசு மற்றும் சுகாதாரப்பணியாளர்கள் பணிக்கு வருவதற்கு உரிய பேருந்து வசதிகள் செய்யப்பட்டுள்ளது.
- தேனி மாவட்டத்திலிருந்து - மதுரை மாவட்டத்திற்கு பேருந்துகள் இயக்கப்படாது.
- கம்பம்- பழனி மற்றும் கம்பம் - திண்டுக்கல் வழித்தடத்தில் தற்போது இயங்கும் பேருந்துகளின் எண்ணிக்கையில் 50 சதவீதம் மட்டும் பேருந்து இயக்கப்படும்.

வேளாண் பணிகள் சார்ந்த போக்குவரத்திற்கு எவ்வித தடையுமில்லை.

மேற்கண்ட தளர்வுகளும் கட்டுப்பாடுகளும் 24.06.2020 அன்று மாலை 6.00 மணி முதல் செயல்படுத்தப்பட வேண்டுமெனவும், மேலும் இந்த ஊரடங்கு காலத்தில் அரசால் அறிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி பொதுமக்கள் / அலுவலர்கள் / பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் அனைவரும் முக கவசங்களை அணியவும், சமூக இடைவெளியினை பின்பற்றவும், சோப்பை உபயோகப்படுத்தி அடிக்கடி கைகளை கழுவும் நடைமுறையை பின்பற்றவும், தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு : செய்தி மக்கள தொடர்பு அலுவலர், தேனி.**